இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறை
இயற்கை விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
மட்டம் - 5
இறுதிப் பரீட்சை – 2022
STU5531/STU5518/6801– கட்டிளமைப்பருவத்திற்கான உளவியல்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 27.11.2022 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

இவ் வினாத்தாள் இரண்டு (02) பகுதிகளைக் கொண்டது.
பகுதி - I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

1. இலங்கையின் இன்றைய கல்வி முறைமையினூடாக கட்டிளமைப்பருவத்தினரின் நன்நலனின் மீது விசேட கவனம் செலுத்தவேண்டியதன் முக்கியத்துவத்திற்கான காரணங்கள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.
2. கட்டிளமைப் பருவத்தின் விருத்தி வீதங்களின் வேறுபாடுகள் எவ்வாறு மனவெழுச்சி ரீதியான பிரச்சினைகளுக்கு இட்டுச்செல்லும் என்பதனை உதாரணமொன்றின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.
3. கட்டிளமைப் பருவத்தினரின் கலாசார சூழமைவு பற்றி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுடன் தொடர்புடைய உதாரணமொன்றின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.
4. நீங்கள் உங்களுடைய பாடசாலையின் தரம் 9 C வகுப்பின் வகுப்பாசிரியர் என கருதுக. கட்டிளமைப் பருவத்தினரின் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள்' எனும் தலைப்பில் பெற்றோர்களுக்கு நடத்தும் விழிப்புணர்வு செயலமர்வில் விசேடமாக கூறவேண்டிய இரண்டு (02) அம்சங்கள் பற்றி கலந்துரையாடுக.
5. கட்டிளமைப் பருவத்தினரின் சிந்தனையுடன் தொடர்புடைய தனியாள் கட்டுக்கதை (Personal Fable) என்பதனால் கருதப்படுவது யாது என உதாரணமொன்றின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.
6. கட்டிளமைப் பருவத்தினருடன் தொடர்புபட்டதாக சமவயதுக் குழுக்கள் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் மூன்றினை (03) பரிசீலனை செய்க.
7. எரிக் எரிக்சன் (1902- 1994) முன்வைத்துள்ளதன்படி கட்டிளமைப்பருவத்தினரின் ஆளுமை விருத்தியின் இயல்புகள் பற்றி சுருக்கமாக விபரிக்குக.
8. கட்டிளமைப்பருவ மாணவர்களிடத்தில் வினைதிறன்மிக்க தொழில்சார் விருப்பங்களை விருத்திசெய்வதற்குப் பின்பற்றக்கூடிய மூன்று (03) உபாயங்களை முன்வைக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. அறிவு விருத்தியுடன் தொடர்புபட்ட வகையில் நியம சிந்தனை என்பதனால் கருதப்படுவது யாது? என சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. கட்டிளமைப் பருவத்தினரின் அறிகைவிருத்தி இயல்புகள் மூன்றினை (03) இனங்கண்டு அவை முன் கட்டிளமைப்பருவ பிள்ளைகளின் அறிகை விருத்தி இயல்புகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. கட்டிளமைப் பருவ மாணவர்களின் அறிகைவிருத்திக்கு வசதிசெய்வதற்கு ஒரு ஆசிரியர் பின்பற்றக்கூடிய நான்கு (04) உபாயங்களை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

10.

i. கட்டிளைஞர்கள் சில வேளைகளில் மனவெழுச்சி ரீதியான கொந்தளிப்பு நிறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இரண்டு (02) காரணங்களின் துணையுடன் இக்கூற்றினை நியாயப்படுத்துக.

(04 புள்ளிகள்)

ii. a) கட்டிளைஞர்கள் அனுபவிக்கும் மனவெழுச்சிசார் பிரச்சினைகள் மனமுறிவுக்கு இட்டுச்செல்லும். அவர்களால் அனுபவிக்கப்படும் மனவெழுச்சிசார் பிரச்சினைகளால் ஏற்படக்கூடிய விளைவுகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

(01x02=02)

b) நீங்கள் பகுதி II- a இல் குறிப்பிட்ட விளைவுகளில் ஒன்றினை பின்வரும் அம்சங்களுக்கு அமைவாக பகுப்பாய்வுசெய்க.

- அவர்களில் ஆபத்து நிலையினை நோக்கிச்செல்வோர்
- விசேடமான காரணங்கள்
- குறித்த கட்டிளைஞர் ஆபத்து நிலையினை எதிர்நோக்கியுள்ளார் என்பதை எவ்வாறு இனங்கண்டுகொள்ளலாம்.

(02x03=06)

iii. மனவெழச்சி ரீதியாக பிரச்சினைக்குள்ளாகியுள்ள கட்டிளைஞர்களுக்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் உதவக்கூடிய விதம் பற்றிய விழிப்புணர்வினை வழங்குவதற்கான கையேடு ஒன்றினை உருவாக்குமாறு நீங்கள் கோரப்பட்டுள்ளீர்கள் என கருதுக. இதில் நீங்கள் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கும் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய கையேட்டினை வடிவமைக்குக.

கையேடு ஒவ்வொரு தரப்பினராலும் (பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள்) பின்பற்றக்கூடிய மூன்று (03) உபாயங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(08 புள்ளிகள்)

11.

i. ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்றின் துணையுடன் ஆளுமை எனும் எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. கட்டிளைஞர்களை பாதிக்கக்கூடிய ஆளுமை மற்றும் உள ரீதியான ஒழுங்கீனங்கள் இரண்டினை பின்வரும் அம்சங்களுக்கு அமைவாக விபரிக்குக.

- அத்தகைய ஒழுங்கீனங்களுக்கு உட்பட்டோர் வெளிக்காட்டும் பண்புகள்
- கட்டிளைஞர்களில் அத்தகைய ஒழுங்கீனங்கள் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள்

(04x02=08 புள்ளிகள்)

iii. நீங்கள் உங்களுடைய பாடசாலையில் தரம் 10 A வகுப்பின், வகுப்பாசிரியர் என கருதுக. மாணவர்கள் ஆரோக்கியமான ஆளுமை விருத்தியை ஏற்படுத்திக்கொள்வதற்கு ஒருவருக்கொருவர் உதவுவதற்கான திட்டம் ஒன்றினை பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக தயாரிக்குக.

- மாணவர்கள் தங்களுக்கிடையில் உதவிசெய்வதற்காக நடைமுறைப்படுத்தக்கூடிய உபாயங்கள் குறைந்தபட்சம் நான்கு (04)
- ஒவ்வொரு உபாயத்தினதும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

(08 புள்ளிகள்)

12. இளைஞர்களின் விருத்தியில் சமூக விழுமியங்களும் ஆர்வங்களும் முக்கியமானவை.

i. இலங்கையின் தற்போதைய கட்டிளைஞர்களிடத்தில் மீள் உருவாக்கம் செய்யப்பட வேண்டிய ஆர்வங்கள் நான்கினை (04) பட்டியற்படுத்துக.

(01x04=04 புள்ளிகள்)

ii. "அண்மித்த வருடங்களில் இளைஞர்களிடத்தில் கட்டிளமைப்பருவ தாய்மையடைதல் மற்றும் பாலியல் ரீதியாக கடத்தப்படும் நோய்கள் பரவுகின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது"

மேற்படி நிலைமைகளுக்கான நான்கு (04) காரணங்களை சுருக்கமாக விளக்குக.

(02x04=08 புள்ளிகள்)

iii. கட்டிளைஞர்களிடத்தில் பாலியல், பாலியல் நடத்தைகள் மற்றும் மீள பிறப்பிப்பு ஆரோக்கியம் ஆகியன பற்றி உடன்பாடான விழுமியங்களை உருவாக்குவதற்காக பாடசாலையினால் பின்பற்றக்கூடிய படிமுறைகள் நான்கினை (04) சுருக்கமாக விளக்குக.

(02x04=08 புள்ளிகள்)

13.

i. ஆளுமைக் கோட்பாடுகளில் ஒன்றினை (01) தெரிவுசெய்து அக்கோட்பாட்டின் பிரதான தத்துவங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

ii. கட்டிளமைப்பருவ மாணவர்களிடத்தில் ஆளுமை விருத்திக்கு வசதிசெய்வதற்கு ஒரு ஆசிரியர் அக் கோட்பாட்டின் தத்துவங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கான மூன்று வழிமுறைகளை விளக்குக.

(09 புள்ளிகள்)

iii. கட்டிளைஞர்களின் ஆளுமையை விருத்திசெய்வதற்காக வசதிசெய்வதற்கு மேற்படி கோட்பாட்டினை பயன்படுத்தும் போது அக் கோட்பாட்டில் காணப்படும் இரண்டு (02) வரையறைகளை பரிசீலனைசெய்து, குறித்த கோட்பாட்டின் தத்துவங்களை பயன்படுத்திக்கொள்வதனூடாக எவ்வாறு நிவர்த்திசெய்யலாம் என சுருக்கமாக கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*